## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

---

*1990. ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

**1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

*[1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ.—ஒ. 48/88.

**1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தில் VIII என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகமானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டத்தின் VIII ஆம் பாகமாகப் பயனுடையதாதலும் வேண்டும்.

"பாகம் VIII

ஆலோசனை ஆணைக்குழுவை அமைத்தலும் அதன் தத்துவங்களும்

ஆலோசனை ஆணைக்குழுவினது நியமனங்கள் முதலியன.

193. (1) அமைச்சரானவர், பதிப்புரிமை, கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள், நேர்மையற்ற போட்டி என்பன தொடர்பிலான சட்டம் தொடர்பாக அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் கருமத்தின்மீது அவருக்கு ஆலோசனையளிக்கும் நோக்கத்துக்காக (இதனகத்துப் பின்னர் "ஆலோசனை ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழு ஒன்றை அமைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சட்டம் அல்லது வர்த்தகம் அல்லது இவற்றோடு தொடர்புபட்ட துறைகளில் திறமை காட்டியுள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் ஐந்திற்குக் குறையாதோரும் பத்திற்கு மேற்படாதோருமான உறுப்பினர்கள் (இப்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; அத்துடன்

(ஆ) பதவிவழி உறுப்பினர் ஒருவராக இருக்கவேண்டியவரும் ஆலோசனை ஆணைக்குழுவிற்கான செயலாளராகப் பணியாற்றவேண்டியவருமான பதிவாளர்.

(3) (அ) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கமைய, ஆலோசனை ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரினது பதவிக்காலம் மூன்றாண்டு களாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், பதவியிலிருந்து விலகுகின்ற அல்லது அகற் றப்படுகின்ற அல்லது வேறுவகையில் பதவியை வறி தாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக் கப்பட்ட உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரை அடுத் துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் ;

(ஆ) காலம் கழிவதன்மூலம் பதவியை வறிதாக்கு கின்ற ஆலோசனை ஆணைக்குழுவினது நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தக வுடையவராதல் வேண்டும்.

(4) (அ) ஆலோசனை ஆணைக்குழுவினது நியமிக்கப் பட்ட உறுப்பினர் அப்பயன்படி அமைச்சருக்கு மூக வரியிட்டனுப்பப்பட்ட கடிதமூலம் பதவியிலிருந்து வில கலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதலும் வேண்டும் ;

(ஆ) அமைச்சர், அதற்கான காரணம் எதுவும் காட் டாது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை எந்நேரத் திலும் பதவியினின்று அகற்றலாம்;

(இ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல் லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவரது பதவிக் குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இய லாதவராக இருக்குமிடத்து அமைச்சர், அவரது இடத் தில் உறுப்பினர் ஒருவராகச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(5) (அ) அமைச்சர், ஆலோசனை ஆணைக்குழுவினது நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து (இப் பாகத்தில் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆலோசனை ஆணைக்குழுவினது தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்;

(ஆ) தவிசாளர் சுகவீனம் காரணமாக, வேறு இய லாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவ தற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், அவ ரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் இன் னும் ஒரு நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்;

(இ) அமைச்சர் எந்நேரத்திலும் அதற்கான காரணம் எதனையும் காட்டாது தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்;

(ஈ) தவிசாளரானவர் அமைச்சருக்கு அப்பயன்படமுகவரியிட்டனுப்பும் கடிதமூலம் தவிசாளர் பதவியில் இருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகுதலானது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்;

(உ) பந்திகள் (இ), (ஈ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரினது பதவிக்காலமானது ஆலோசனை ஆணைக்குழுவில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(6) ஆலோசனை ஆணைக்குழு இப்பாகத்தின்கீழ் அதன் கடமைகளைப் புரிவதில் அதற்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

(7) ஆலோசனை ஆணைக்குழுவினது உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(8) பின்வருவனவற்றைச் செய்தல் ஆலோசனை ஆணைக்குழுவினது கடமையாதல் வேண்டும்:—

(அ) அமைச்சரினால் காலத்துக்குக் காலம் அதற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவாறாக, பதிப்புரிமை, கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள், நேர்மையற்ற போட்டி என்பன பற்றிய சட்டம் தொடர்பான ஏதேனும் கருமம் அல்லது விடயம் மீது விசாரணை நடாத்தி அமைச்சருக்கு அறிக்கையிடல்;

(ஆ) காலத்துக்குக்காலம், பதிப்புரிமை, கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள், நேர்மையற்ற போட்டி என்பன தொடர்பானதும், அவற்றிற்கு ஏற்புடையதுமான சட்டத்தினை மீளாய்வு செய்தலும், அத்தகைய சட்டத்தைத் திருத்தியமைத்தலும், மாற்றியமைத்தலும், சேர்த்தலுக்குமான விதப்புரைகளை அமைச்சருக்கு செய்தலும்;

(இ) பந்தி (அ) வில் அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கையை அல்லது முன் மொழிவைச் செய்வதில் ஆலோசனை ஆணைக் குழுவானது அவ்வாறு செய்வது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, வியாபார மன்றங்கள், உயர்தொழில்சார் ஒழுங்கமைப்புக்கள், தொடர்புபட்ட நிறுவனங்கள், அரசாங்க அதிகாரசபைகள், பொதுமக்கள் என்பனவற்றைக் கலந்தாலோசித்தலும் அவற்றின் கருத்துக்களை கவனத்திற்கெடுத்தலும்.

(9) ஆலோசனை ஆணைக்குழு அதன் கடமைகளைப் புரிதல் தொடர்பாகவும் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பாகவும் அமைச்சர், சிறப்பான அல்லது பொதுவான பணிப்புக்களை எழுத்தில் அதற்கு விடுக்கலாம் என்பதுடன், ஆலோசனை ஆணைக்குழு அத்தகைய பணிப்புக்களுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.".